**17.** பழநி நகராட்சிக்கு சொந்தமான ஆணையாளர் மற்றும் பொறியாளர் குடியிருப்பு வ.ஊ.சி தெருவில் உள்ளது. குடியிருப்புகளை சுற்றியுள்ள சுற்றுச் சுவர் மிகவும் தாழ்வாக உள்ளது அதன் ஒரு பகுதி கிழக்கு பக்கம் இடிந்து விழந்த நிலையில் உள்ளது வாகனங்கள் நிறுத்த ஒரு ஷெட் இல்லாமல் உள்ளது எனவே புதிய கூரை அமைத்து வாகனங்கள் நிறுத்துமிடம் அமைக்கவும், சுற்றுச்சுவர் உயர்த்தி அமைக்கவும் இடிந்த இடத்தில் சுற்றுச்சுவர் அமைக்கவும் மூன்று பாலம் அமைக்கவும் (ஆணையாளர் குடியிருப்பு செல்லும் வழி, பொறியாளர் குடியிருப்பு செல்லும் வழி, வாகனம் செல்லும் வழி) அதற்குண்டான இரும்பு கேட் அமைக்கவும் மேலும் மழைக்காலங்களில் வெளியில் வடிகாலில் இருந்து மழை நீர் குடியிருப்புக்குள் புகுந்து விடுகின்றது எனவே தளத்தினை உயர்த்தி நடைபாதை அமைக்கவும் மரங்கள் நிறைந்த இடமாக உள்ளதால் கொசு உற்பத்தியாகி அதிகம் உள்ளதால் கொசுக்கள் வீட்டினுள் புகாத வன்னம் கொசுவலை அமைக்கவும் சுற்றுச்சுவர் வர்ணம் பூசவும், ஆழ்துளை கிணறு ஒன்று பிற உபயோகத்திற்கு பயன்படுத்தி அமைக்கவும் அதற்கு தேவையான பொருட்கள் வாங்கவும்
அறிவுறுத்தப்பட்டது அதற்கு மதிப்பீடு ரூ.10.00 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது அதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.
2)மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**18.** பழநி நகராட்சிக்கு சொந்தமான ஆண்கள் மேல்நிலைப் பள்ளி திண்டுக்கல் சாலையில் அமைந்துள்ளது, பள்ளி சுமார் 40 வருடங்களுக்கு மேல் மராமத்து பணி மேற்கொள்ளப்பட்டது, தற்போது பள்ளியில் பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை கூடிக்கொண்டு வருகிறது.

தற்போது நகராட்சி பள்ளியின் மேற்கூரையின் மேல் உள்ள டைல்ஸ் மோசமான நிலையில் உள்ளது இதனால் தண்ணீர் வெளியேறாமல் கசிவாகி வகுப்பு அறையினை பயன்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளது. ஜென்னல் கதவுகள் மிகவும் பழமையானது, உடைந்து பயன்படுத்த முடியாதநிலையில் உள்ளது எனவே புதிய கதவு மற்றும் ஜென்னல் பொருத்தவும், படிக்கட்டு மிகவும் மோசமான நிலையில் உள்ளதனை படிகட்டு அமைத்து SS கைபிடியுடன் அமைக்கவும், மேலும் மேற்கூரையின் மேல் (Treetment) புதிய நவீன உத்தியினை கையான்டு கால நீட்டிப்பு செய்யவும், பள்ளிவளாகம் முழுவதும் வர்ணம் பூச்வும், தற்போது பள்ளியின் உட்புறம் விஷமிகள் புகாவன்னம் ஆங்காங்கே சுற்றுச்சுவர் எழுப்பவும், கேட்டினை மராமத்து பணி மேற்கொள்ளவும் மதிப்பீடு தயார் செய்ய அறிவுறுத்தப்பட்டது அதனடிப்படையில் மதிப்பீடு ரூ.22.00 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது அதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.
2)மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**19.** பழநி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2014–2015–ல் ரூ.485.50 இலட்சம் திட்ட மதிப்பீடு ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் கீழ்கண்டப் பணி ரூ.13.50 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு உரிய ஒப்பந்தபுள்ளி கோரி திரு.V.நடராஜன், ஒப்பந்ததாரருக்கு நகர்மன்றத் தீர்மான எண்.1514, நாள். 23.01.2015–ன்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டது. இப்பணி வேலை உத்திரவின்படி 60 நாட்களுக்குள் முடித்திருக்க வேண்டும், பணி துவக்கிய நிலையில் உரக்கிடங்கு அருகாமையில் உள்ள பெரியப்பா நகர் குடியிருப்போர் நலச் சங்க பிரதிநிதிகள் பசுமைத் தீர்பாயத்தில் வழக்கு தொடர்ந்ததின் பேரில் பணிகள் நிறுத்தப்பட்டது, வழக்கு நகராட்சிக்கு சாதகமாக 14/07/2017–ல் தீர்ப்பு பெறப்பட்டபின் பணிகளை துவக்கி முடித்து கொடுக்க உத்திரவிடப்பட்டது, உத்திரவின்பேரில் பணியினை துவக்கி மேற்கொண்டு செய்யாமல் ஒப்பந்ததாரர் நிறுத்தி வைத்ததன் காரணமாக பணியினை உடன் மேற்கொண்டு முடிக்க பல அறிவிப்புகள் அனுப்பியும் ஒப்பந்ததாரர் இதுநாள் வரை பணி மேற்கொள்ளாததால், (இவ்வலுவலக அறிவிப்பு நாள். 17.7.2017,18.8.2017, 28.8.2017, 21.9.2017, 10.10.2017,17.11.2017, 2.04.2018 மற்றும் இறுதி அறிவிப்பு.19/9/2018) அனுப்பப்பட்டும் பணி மேற்கொள்ள முன்வராததால் பணி மேற்கொண்டு செய்து முடித்து கொடுக்கமாட்டார் என தெரிகின்றது, எனவே இப்பணிக்கான ஒப்பந்தத்தினை இரத்து செய்யவும் 12/11/2018–ல் நகராட்சி நிர்வாக ஆணையரின் ஆய்வு கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி வேறு மாற்று பணி எடுத்து செய்யவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. இப்பணியினை இரத்து செய்வதால் ஒப்பந்ததாரரின் முன்வைப்புத் தொகை மற்றும் நிறுத்திவைப்புத் தொகை ஆகியவற்றை பறிமுதல் செய்து நகராட்சிக் கணக்கில் சேர்க்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | வேலை உத்திரவு நாள் |
|---|---|---|---|---|
| 1 | Construction of Leachate tank at compost yard | திரு.V.நடராஜன் | ரூ.13.50 | 27/01/2015 |

**அலுவலகக் குறிப்பு :**

1. வேலை உத்திரவை ரத்து செய்யலாம்.
2. ஒப்பந்ததாரர் இப்பணிக்காக செலுத்திய முன்வைப்புத் தொகை, நிறுத்தி வைப்புத் தொகை ஆகியவை பறிமுதல் செய்யலாம். பறிமுதல் செய்து நகராட்சி கணக்கில் வரவுவைக்க அனுமதிக்கலாம்.
3. மாற்றுப் பணி எடுத்து, நகராட்சி நிர்வாக ஆணையர் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளலாம்.

**20.** பழநி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் **2014–2015–ல்** ரூ.**485.50** இலட்சம் திட்ட மதிப்பீடு ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் கீழ்கண்டப் பணி ரூ.**12.00** இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு உரிய ஒப்பந்தபுள்ளி கோரி திரு.V.நடராஜன், ஒப்பந்ததாரருக்கு நகர்மன்றத் தீர்மான எண்.1515, நாள். 23.01.2015–ன்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டது. இப்பணி வேலை உத்திரவின்படி **60** நாட்களுக்குள் முடித்திருக்க வேண்டும், பணி துவக்கிய நிலையில் உரக்கிடங்கு அருகாமையில் உள்ள பெரியப்பா நகர் குடியிருப்போர் நலச் சங்க பிரதிநிதிகள் பசுமைத் தீர்பாயத்தில் வழக்கு தொடர்ந்ததின் பேரில் பணிகள் நிறுத்தப்பட்டது, வழக்கு நகராட்சிக்கு சாதகமாக **14/07/2017–ல்** தீர்ப்பு பெறப்பட்டபின் பணிகளை துவக்கி முடித்து கொடுக்க உத்திரவிடப்பட்டது, உத்திரவின்பேரில் பணியினை துவக்கி மேற்கொண்டு செய்யாமல் ஒப்பந்ததாரர் நிறுத்தி வைத்ததன் காரணமாக பணியினை உடன் மேற்கொண்டு முடிக்க பல அறிவிப்புகள் அனுப்பியும் ஒப்பந்ததாரர் இதுநாள் வரை பணி மேற்கொள்ளாததால், (இவ்வலுவலக அறிவிப்பு நாள். **17.7.2017,18.8.2017, 28.8.2017, 21.9.2017, 10.10.2017,17.11.2017, 2.04.2018** மற்றும் இறுதி அறிவிப்பு.**19/9/2018)** அனுப்பப்பட்டும் பணி மேற்கொள்ள முன்வராததால் பணி மேற்கொண்டு செய்து முடித்து கொடுக்கமாட்டார் என தெரிகின்றது, எனவே இப்பணிக்கான ஒப்பந்தத்தினை இரத்து செய்யவும் **12/11/2018–ல்** நகராட்சி நிர்வாக ஆணையரின் ஆய்வு கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி வேறு மாற்று பணி எடுத்து செய்யவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. இப்பணியினை இரத்து செய்வதால் ஒப்பந்ததாரரின் முன்வைப்புத் தொகை மற்றும் நிறுத்திவைப்புத் தொகை ஆகியவற்றை பறிமுதல் செய்து நகராட்சிக் கணக்கில் சேர்க்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | வேலை உத்திரவு நாள் |
|---|---|---|---|---|
| 1 | Drilling of 150 mm dia deep bore well with Construction of 30,000 lit capacity OHT and Laying of distribution main at compost yard | திரு.V.நடராஜன் | ரூ.12.00 | **27/01/2015** |

**அலுவலகக் குறிப்பு :**

1. வேலை உத்திரவை ரத்து செய்யலாம்.
2. ஒப்பந்ததாரர் இப்பணிக்காக செலுத்திய முன்வைப்புத் தொகை, நிறுத்தி வைப்புத் தொகை ஆகியவை பறிமுதல் செய்யலாம். பறிமுதல் செய்து நகராட்சி கணக்கில் வரவுவைக்க அனுமதிக்கலாம்.
3. மாற்றுப் பணி எடுத்து, நகராட்சி நிர்வாக ஆணையர் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளலாம்.

**21.** பழநி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் **2014–2015–ல்** ரூ.**485.50** இலட்சம் திட்ட மதிப்பீடு ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் கீழ்கண்டப் பணி ரூ.**35.00** இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு உரிய ஒப்பந்தபுள்ளி கோரி திரு. எம்.இராமசாமி ஒப்பந்ததாரருக்கு நகர்மன்றத் தீர்மான எண்.1516/13, நாள்.23/01/2015 –ன்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டது. இப்பணி வேலைஉத்திரவின்படி **60** நாட்களுக்குள் முடித்திருக்க வேண்டும், பணி துவக்கிய நிலையில் உரக்கிடங்கு அருகாமையில் உள்ள பெரியப்பா நகர் குடியிருப்போர் நலச் சங்க பிரதிநிதிகள் பசுமைத் தீர்பாயத்தில் வழக்கு தொடர்ந்ததின் பேரில் பணிகள் நிறுத்தப்பட்டது, வழக்கு நகராட்சிக்கு சாதகமாக **14/07/2017–ல்** தீர்ப்பு பெறப்பட்டபின் பணிகளை துவக்கி முடித்து கொடுக்க உத்திரவிடப்பட்டது, உத்திரவின்பேரில் பணியினை துவக்கி மேற்கொண்டு செய்யாமல் ஒப்பந்ததாரர் நிறுத்தி வைத்ததன் காரணமாக பணியினை உடன் மேற்கொண்டு முடிக்க பல அறிவிப்புகள் அனுப்பியும் ஒப்பந்ததாரர் பேஸ்மெண்ட் பில்லர் பணிகள் மட்டும் அமைத்து அதற்கான பட்டியல் ரூ.**3.00** இலட்சம் பெற்றுக்கொண்டு மேற்கொண்டு பணி மேற்கொள்ளாததால், (இவ்வலுவலக அறிவிப்பு நாள். **17.7.2017,18.8.2017, 28.8.2017, 21.9.2017, 10.10.2017,17.11.2017, 2.04.2018** மற்றும் இறுதி அறிவிப்பு.**19/9/2018)** அனுப்பப்பட்டும் பணி மேற்கொள்ள முன்வராததால் பணி மேற்கொண்டு செய்து முடித்து கொடுக்கமாட்டார் என தெரிகின்றது, எனவே இப்பணிக்கான ஒப்பந்தத்தினை இரத்து செய்யவும் **12/11/2018–ல்** நகராட்சி நிர்வாக ஆணையரின் ஆய்வு கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி வேறு மாற்று பணி எடுத்து செய்யவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. இப்பணியினை இரத்து செய்வதால் ஒப்பந்ததாரரின் முன்வைப்புத் தொகை மற்றும் நிறுத்திவைப்புத் தொகை ஆகியவற்றை பறிமுதல் செய்து நகராட்சிக் கணக்கில் சேர்க்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | வேலை உத்திரவு நாள் |
|---|---|---|---|---|
| 1 | Construction of Pre Processing shed at compost yard. | திரு. எம்.ராமசாமி | ரூ.35.00 | **27/01/2015** |

**அலுவலகக் குறிப்பு :**

1. வேலை உத்திரவை ரத்து செய்யலாம்.
2. ஒப்பந்ததாரர் இப்பணிக்காக செலுத்திய முன்வைப்புத் தொகை, நிறுத்தி வைப்புத் தொகை ஆகியவை பறிமுதல் செய்யலாம். பறிமுதல் செய்து நகராட்சி கணக்கில் வரவுவைக்க அனுமதிக்கலாம்.
3. மாற்றுப் பணி எடுத்து, நகராட்சி நிர்வாக ஆணையர் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளலாம்.

**22.** பழநி நகராட்சி 01–12–1988–ல் இருந்து தேர்வுநிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. **6.63** சதுர கி.மீட்டர் பரப்பளவு கொண்ட இந்நகராட்சியில் **33** வார்டுகள் அமைந்துள்ளன. **2011**ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி நகராட்சியின் மக்கள் தொகை **70667** ஆகும்.

பழனி நகராட்சியில் உள்ள பேருந்து நிலையம் **1984**ஆண்டு விரிவுபடுத்தப்பட்டது. பழனி நகராட்சியில் தற்போது உள்ள வ.உ.சி பேருந்து நிலையத்தில் போதிய இடவசதி இல்லாத காரணத்தினால் பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்து அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய பேருந்து நிலையம் புதியதாக கட்டி முடிக்கப்பட்டுளள பேருந்து நிலையத்தின அனைத்து அடிப்படை வசதிகள மறறும் பாதுகாப்புகளை ஆயவு செயது 9001 : 2008 சானறு பெறப்பட்டுளளது.

மேலும் பேருந்து நிலையத்தில் மராமத்துப் பணி மேற்கொள்ளப்பட்டு சுமார் **10** வருடங்களுக்கு மேல் ஆனதால் பேருந்துநிலையத்தின் தரைத்தளம் சேதமடைந்துள்ளது, அதனை சீர் செய்யவும், பேருந்துநிலையத்திற்கு எதிரே உள்ள இடம் காலியாக உள்ள இடத்தில் **16** கடைகள் விஷமிகள் சிறுநீர்கழிக்கும் இடமாக பயன்படுத்திவருவதால் அதனை தவிர்க்கும் பொருட்டு **10** x **8** கடைகள் வீதம் அமைக்கவும், பேருந்துகளை நிறுத்துமிடத்தைச் சுற்றிலும் நவீன கிராணைட் சுமார் **3**'' தடிமனுள்ள கற்களை அழகுடன் அமைக்கவும் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்களால் புகார் செய்த வண்ணம் உள்ளனர் அதனை தவிர்க்கும் பொருட்டு ஆணையர் அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உடன் பணிகள் மேற்கொள்ள வழங்கப்பட்ட அறிவுறையின்படி உத்தேச மதிப்பீடு ரூ.**10.00** இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**23.** பழநி நகராட்சிக்கு சொந்தமான மதனபுரத்தில் கட்டப்பட்டுள்ள சமுதாயக் கூடத்திற்கு அனைத்துப் பணிகளும் முடிவடைந்த நிலையில் உள்ளது, மேலும் அந்த கட்டிடத்திற்கு தேவையான இடங்களில் Light Point, Plug Point, மின்விசிறி அமைக்க அறிவுறுத்தப்பட்டது அதனடிப்படையில் உத்தேச மதிப்பீடு ரூ.**3.50** இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது அதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.

2)மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**24.** இந்நகரம் கோவில் ஸ்தலமாக உள்ளதால் நாள்தோறும் இலட்சக்கணக்கான பக்தர்கள் வந்துசெல்கின்றனர் புதிய பேருந்து நிலையத்தின் உட்புறம் உள்ள அம்மா உணவகம் அருகில் இரவில் இருள் சூழ்ந்து குற்றங்கள் நடைபெற ஏதுவாக இருப்பதாலும் விஷமிகளின் கூடாரமாக உள்ளது மேலும் High Mast light 16 m உயரத்தில் அமைக்கவும், பொள்ளாச்சி, கோவை பஸ்நிலையத்தில் உட்புறம் விளக்கு அமைக்கவும், மதிப்பீடு தயார் செய்ய சார் ஆட்சியர், ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களிடம் அறிவுறுத்தப்பட்டதின் அடிப்படையில் மதிப்பீடு ரூ.**8.00** இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கு ஆகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**25.** கடந்த **16,17**/நவம்பர்/ **2018**–ல் ஏற்பட்ட 'கஜா'புயலின் காரணமாகவும், தொடர்ந்து பெய்த பருவ மழையின் காரணமாகவும் நகராட்சி தார் சாலைகள், தெருக்களில் ஏற்பட்டுள்ள குழிகளை பேட்ச்ஒர்க்ஸ், தார்பேட்ச் போடவும், சாலையின் குறுக்கே வெட்டப்பட்டுள்ள பைப்லைனை பேட்ச்சுகள் போடவும், சாலைகளில் ஏற்பட்டுள்ள கான்கிரீட் பேட்ச்போடவும், நகராட்சி நிர்வாக ஆணையர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சென்னை அவர்கள் **21/12/2018**–ல் சென்னையில் நடைபெற்ற கருத்தரங்க கூட்டத்தில் வழங்கிய அறிவுரையின்படி சாலைகளை சீர்செய்ய மதிப்பீடு ரூ.**8.00** இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது, அதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. அவசர அசசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**26.** பழநி நகராட்சியில் ஆணையர் பயன்பாட்டில் உள்ள வாகன எண்.TN 94 4677 புதிய ஸ்கார்ப்பியோ வாகனத்திற்கு **40,000** கி.மீ ஆயில் சர்வீஸ் மற்றும் மராமத்துப் பணிகள் மேற்கொள்வதற்கு மகேந்திரா TVS நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட இன்சூரன்ஸ் மதிப்பீடு ரூ.**35,000/–** க்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு :**பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**27.** பழநி நகராட்சி பொறியர் பிரிவில் குடிநீர் விநியோகம் பணிகள் மேற்கொள்ளவும், அரசின் திட்டப்பணிகள் மேற்கொள்ளவும் நாளிதழிகளில் ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் பொதுநிதிப்பணிகள், கல்விநிதிப்பணிகள், குடிநீர் நிதிப்பணிகள் 2018–2019 மற்றும் 2019–2020 –ம் ஆண்டிற்கான விளம்பரங்கள் செய்வதற்கு உத்தேச செலவினம் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.
**அலுவலகக் குறிப்பு :**பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**28.** பழநி நகராட்சியில் வருகின்ற தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு 2018–2019–பொதுநிதியின் கீழ் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 3 இடங்களில் தற்காலிக முதலுதவி மையங்கள் மற்றும் 15 இடங்களில் தற்காலிக HDPE தண்ணீர் டேங்குகள் கூடிய தண்ணீர் பந்தல்கள் அமைத்து குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு 28.12.2017–ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விவரம் |
|---|---|---|
| 1. | திரு.ஆர்.மகேந்திரன்,<br>14/140, சராப் சந்து,<br>பழநி. | –0.13% மதிப்பீட்டிற்கு குறைவு முன்வைப்புத் தொகை<br>**ரூ.4,000/–** வங்கி வரைவோலை எண். 583127 / IOB பழனி நாள். 28.12.2018 |
| 2. | திரு . ஆர்.செல்லத்துரை,<br>வா.எண்.6 அன்னமார்கோவில்தெரு<br>அமரபூண்டிபோஸ்ட், பழனி தாலுகா. | 2.51 % மதிப்பீட்டிற்கு அதிகம் முன்வைப்புத் தொகை<br>**ரூ.4,000/–** சலான் எண் ந.செ.சீ.எண். 080/1–2–18–19/0005649 , நாள். 28.12.2018 |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **திரு.ஆர்.மகேந்திரன், –** 0.13% குறைவு ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலகக் குறிப்பு :**
**1)** மன்றம் அனுமதிக்கலாம்.
2) வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **திரு.ஆர்.மகேந்திரன், –** 0.13% **குறைந்த** ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நகரில் நடைபெறஉள்ள தைப்பூசத்திருவிழவை முன்னிட்டு அவசிய அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதியுடன் வேலைஉத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.3031/2018/இ2).**

**29.** பழநி நகராட்சியில் வருகின்ற தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு 2018–2019–பொதுநிதியின் கீழ் (புதிய பேருந்து நிலையம் மற்றும் அருள்ஜோதி வீதி) 2 இடங்களில் தற்காலிக நடமாடும் கழிப்பறைகள் அமைத்து நீரளிப்பு வசதி மற்றும் உறிஞ்சு குழிகளுடன் பொருத்தும் பணிக்கு 28.12.2017–ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விவரம் |
|---|---|---|
| 1. | திரு . ஆர்.செல்லத்துரை,<br>வா.எண்.6 அன்னமார்கோவில்தெரு<br>அமரபூண்டிபோஸ்ட், பழனி தாலுகா. | -1.31% மதிப்பீட்டிற்கு குறைவு முன்வைப்புத் தொகை<br>**ரூ.1100/–**<br>சலான் எண் ந.செ.சீ.எண். 080/1–2–18–19/0005651 , நாள். 28.12.2018 |
| 2. | திரு.R.ரவிக்குமார்,<br>த/பெ. சு.ரெங்கசாமி,<br>16/195, பாட்டாளி தெரு,<br>பழனி. | 1.59% மதிப்பீட்டிற்கு அதிகம் முன்வைப்புத் தொகை<br>**ரூ.1100/–**<br>வங்கி வரைவோலை எண். 583125 / IOB, பழனி நாள். 28.12.2018 |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **திரு.ஆர்.செல்லத்துரை, -** 1.31% குறைவு ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலகக் குறிப்பு :**
**1)** மன்றம் அனுமதிக்கலாம்.
2) வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **திரு.ஆர்.செல்லத்துரை,** -1.31% **குறைந்த** ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நகரில் நடைபெறஉள்ள தைப்பூசத்திருவிழவை முன்னிட்டு அவசிய அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதியுடன் வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.3031/2018/இ2).**

**30.** பழநி நகராட்சியில் வருகின்ற தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு 2018–2019–பொதுநிதியின் கீழ் நகராட்சிக்குட்பட்ட மேல்நிலைப்பள்ளியில் உறிஞ்சு குழிகளுடன் தற்காலிக கழிப்பறைகள் அமைக்கும் பணிக்கு 28.12.2018–ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விவரம் |
|---|---|---|
| 1. | திரு.R.ரவிக்குமார்,<br>த/பெ. சு.ரெங்கசாமி,<br>16/195, பாட்டாளி தெரு,<br>பழனி. | –0.12% மதிப்பீட்டிற்கு குறைவு<br>முன்வைப்புத் தொகை<br>ரூ.3,000/–<br>வங்கி வரைவோலை எண்.583126 / IOB,<br>பழனி நாள். 28.12.2018 |
| 2. | திரு . ஆர்.செல்லத்துரை,<br>வா.எண்.6 அன்னமார்கோவில்தெரு<br>அமரபூண்டிபோஸ்ட், பழனி தாலுகா | 2.8 % மதிப்பீட்டிற்கு அதிகம் முன்வைப்புத் தொகை<br>ரூ.3,000/–<br>சலான் எண் ந.செ.சீ.எண். 080/1–2–18–19/0005650 , நாள். 28.12.2018 |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.R.ரவிக்குமார், –0.12% குறைவு ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.R.ரவிக்குமார், –0.12% **குறைந்த** ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நகரில் நடைபெறஉள்ள தைப்பூசத்திரவிழவை முன்னிட்டு அவசிய அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதியுடன் வேலைஉத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3031/2018/இ2).

**31.** பழனி நகராட்சிக்கு சொந்தமான பாலாறு டேமில் உள்ள தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள வடி படுகையில் உள்ள yet valve, scour valve, Flash mixer–ல் உள்ள மின்மோட்டார் பழுது, Finger set–ல் soft மேலும் Raw water–ல் 75 HP மின்மோட்டார் Finder set, 500Am Fuse carrier பழுது மற்றும் wash meter valve ஆகியவைகளை பழுது நீக்கம் செய்யவும் புதிதாக சில பொருட்களை உடனடியாக மாற்றவும் மதிப்பீடு ரூ.1,40,000/– க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி உள்ளூர் மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் ஏற்கலாம்.
3. அவசர அவசியம் கருதி வருகின்ற தைப்பூச திருவிழாவினை முன்னிட்டு பொதுமக்களின் நலன் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளிக்கு வேலை உத்திரவு வழங்கவும், பட்டியல் வழங்கவும் அனுமதிக்கலாம்.

**32.** உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி 2016 – 2017 – பழனி நகராட்சி – சத்யா நகரில் – JICA திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் மேல்நிலைத் தொட்டிக்கு சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.15.00 இலட்சம். இதற்கான வேலை உத்திரவு வழங்கப்பட்ட நாள்.28.04.2017 அதைத் தொடர்ந்து ஒப்பந்ததாரரிடம் பலமுறை அறிவுறுத்தியும் இப்பணி தொடரப்படவில்லை. எனவே 15.06.2017,17.07.2017,28.08.2017,20.11.2017 நான்கு அறிவிப்புகள் வழங்கப்பட்டபின் பணிகள் துவங்கி மண் வேலை செய்து ஒருபக்கம் சுவருக்கான காலம் (pillar) மட்டும் அமைத்து அதன்பின் பணி ஏதும் நடைபெறவில்லை. இதனால் இறுதி அறிவிப்பு 09.11.2018–ல் வழங்கப்பட்டும் இதுநாள் வரை பணி ஏதும் நடைபெறவில்லை. இப்பணி அரசின் திட்டப் பணியாகும் விரைந்து முடித்து அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டியுள்ளதால் துறை மூலம் இப்பணியை மேற்கொள்ள அனுமதியும் இதனால் ஏற்படும் நிதி இழப்புக்கு ஒப்பந்ததாரரின் முன்வைப்பிலிருந்து ஈடு செய்து நகராட்சி கணக்கில் வரவு வைக்க தனி அலுவலரின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. இப்பணியில் ஏற்படும் ஒப்பந்ததாரரின் முன்வைப்பு தொகையை ஈடு செய்து நகராட்சி கணக்கில் வரவு வைக்க மன்றம்அனுமதிக்கலாம்
2. துறைமூலம் பணி மேற்கொள்வதற்கு அனுமதிக்கலாம்.
   **(ந.க.எண்.4353/2007/இ2)**

**33.** இந்நகராட்சி பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம் 2017–2018–ன் கீழ் 12 பணிகளுக்கு மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.4795/2017/அ5, நாள்.30/10/2017–ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி, வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர் பணி ஏதும் தொடங்காததால் 6வது வார்டு மற்றும் 9வது வார்டு 2 பணிகளுக்கான ந.க.எண்.4795/2017/அ5, நாள்.06/04/2018 கடிதத்தின் படி 2 பணிகளுக்கும் மட்டும் மாற்றுப்பணி பரிந்துரை செய்யப்பட்டு இப்பணி ரத்து செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மேலும் மேலும் 7,15,27,28வது வார்டுகளுக்கான நான்கு பணிகளையும் ரத்து செய்து மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.4795/2017/அ5, நாள்.24/09/2018–ல் நிர்வாக அனுமதி ரத்து செய்து வரப்பெற்றுள்ளது. எனவே கீழ்க்கண்ட பணிக்கான வேலை உத்திரவை ரத்து செய்து வரப்பெற்ற மாவட்ட ஆட்சியரின் உத்திரவு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. பழனி நகராட்சி 9–வது வார்டு வ.உ.சிதெரு, ஆர்.எம்.கே. பள்ளி பின்புறம் புதிதாக போர்வெல் அமைத்து மின்மோட்டார் பொருத்தி பைப்லைனுடன் கூடிய சின்டெக்ஸ் அமைத்தல் பணி.
2. பழனி நகராட்சி 6–வது வார்டு நேதாஜி ரோட்டில் புதிதாக போர்வெல் அமைத்து மின்மோட்டார் பொருத்தி பைப்லைன் மற்றும் சின்டெக்ஸ் அமைத்து குடிநீர் விநியோகித்தல் பணி.
3. பழனி நகராட்சி 7–வது விவேகானந்தர் ரோட்டில் புதியதாக போர்வெல் அமைத்து மின்மோட்டார் பொருத்தி பைப்லைன் மற்றும் சின்டெக்ஸ் அமைத்து குடிநீர் விநியோகித்தல் பணி.
4. பழனி நகராட்சி 15–வது வார்டு தோட்டக்காரத் தெருவில் மினி பவர் பம்ப் மற்றும் சித்தநாதன் தெரு விரை பைப்லைன் அமைத்து குடிநீர் வழங்குதல் பணி .
5. பழனி நகராட்சி 27–வது வார்டில் கழிவு நீர் வாய்க்கால் அமைத்தல் பணி.
6. பழனி நகராட்சி 28–வது வார்டு, அண்ணாநகர் பகுதியில் சிமெண்ட் வடிகாலுடன் கூடிய சிறிய பாலம் அமைத்தல் பணி.

**அலுவலகக்குறிப்பு:** ரத்து செய்து வரப்பெற்ற உத்திரவினை மன்றம் ஏற்கலாம்.

**34.** பழனி நகராட்சிக்கு சொந்தமான 4 வது வார்டு பெரியப்பா நகரில் 2வது தெருவில் வடிகால் பாதி வரை மட்டுமே உள்ளது. தற்போது அந்த வடிகாலின்று வருகின்ற நீர் பாதிவழியிலேயே நின்று விடுகின்றது. இதனால் கழிவு நீர் தேங்கி கொசு உற்பத்தி ஆகி சுகாதாரமற்ற நிலை உருவாகி வருகிறது. மேலும் பொதுமக்களிடம் இருந்து புகார் வந்த வண்ணம் உள்ளது. எனவே மீதமுள்ள இடத்தில் புதியதாக வடிகால் அமைக்க மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.

நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம்அனுமதிக்கலாம்.

**35.** பழநி நகராட்சி பகுதியில் பருவ மழையினால் ஏற்பட்ட பருவநிலை மாற்றத்தால் பெது மக்களுக்கு பன்றி காய்ச்சல் A(H1 N1) இன்ஃப்புளுயன்ஸா மற்றும் டெங்கு காய்ச்சல் ஏற்பட்டு வருகிறது. இதனை தடுக்கும் பொருட்டு பொது மக்களுக்கு கை கழுவுதல், தன் சுத்தம், சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருத்தல் போன்ற விழிப்புணர்பு ஏற்படுத்த தூய்மையாக வைத்திருத்தல் போன்ற விழிப்புணர்வு ஏற்படுத்த தூய்மை இந்தியா திட்டத்தின்படி, பொது மக்களிடம் வீடுவீடாக இரண்டு குப்பை தொட்டிகள் வைத்து மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த கலை நிகழ்ச்சிகள் நடத்த பழநி நகராட்சி பகுதிகளில் உள்ள 33 வார்டுகளில் 16 கலை நிகழ்ச்சிகள் நடத்தவும் அதற்கான ஒப்பந்தப்புள்ளி 30–11–2018 தேதி நடத்தப்பட்டது. கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி மூன்று பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | தென்னகத்து கலைத் தென்றல் குழு,<br>கிராமிய கலைக்குழு,<br>87/2, பழநி ரோடு,<br>திண்டுக்கல். | ரூ.8500/– ஒரு கலை நிகழ்ச்சிக்கு<br>1,36,000/- (16 கலை நிகழ்ச்சிக்கு) |
| 2 | நியு இந்தியன் கலைக்குழு,<br>17, பேருந்து நிலையம் அருகில்,<br>பழநி | ரூ.8300/– ஒரு கலை நிகழ்ச்சிக்கு<br>1,32,800/- (16 கலை நிகழ்ச்சிக்கு) |
| 3 | அன்னை கம்சலை கல்வி அறக்கட்டளை,<br>(பதிவு எண்.1310), எண்.24,<br>அன்சாரி நகர், மகபூபாளையம்,<br>மதுரை–16 | ரூ.7950/– ஒரு கலை நிகழ்ச்சிக்கு<br>1,27,200/- (16 கலை நிகழ்ச்சிக்கு) |

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.3–ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே, குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள அன்னை கம்சலை கல்வி அறக்கட்டளை, பதிவு எண்.1310, எண்.24, அன்சாரி நகர், மகபூபாளையம், மதுரை–16 என்ற கலைக்குழுவின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் தனி அலுவலர் அவர்களின் கூட்டத்தில் பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** பொது சுகாதார நலன் கருதி அவசர அவசியம் முன்னிட்டு மதிப்பீட்டு விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள அன்னை கம்சலை கல்வி அறக்கட்டளை, பதிவு எண்.1310, எண்.24, அன்சாரி நகர், மகபூபாளையம், மதுரை–16 என்ற கலைக்குழுவிற்கு பணி உத்தரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதனை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4843/17/H2)

நகராட்சி அலுவலகம், பழனி
நாள். 31–12–2018

தனி அலுவலர்
பழனி நகராட்சி